**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 271/2020**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 05.01.2026.**

| | |
|---|---|
| **Name : பரஞ்ஜோதி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் மகன் ஆவார். அவர் மளிகை கடை நடத்தி வருகிறார். கடந்த 12.09.2019 ம் தேதியன்று என் மகன் அவருக்கு சொந்தமான புல்லட் இரு சக்கர வாகனத்தில் மளிகை கடையை மூடிவிட்டு வீட்டிற்கு இரவு 10 மணிக்கு வந்து வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்தார். காலை 6 மணிக்கு நான் எழுந்து பார்த்த போது வண்டியை காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. என் மகன் மேச்சேரி காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் மனு கொடுத்தார்.

2) புகாரின் பேரிலான விசாரணையில் போலீசார் வாகனம் கிடைத்து விட்டதாக சொன்னார்கள். என் மகன் நீதிமன்றம் மூலமாக இரு சக்கர வாகனத்தை பெற்று வந்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இரு சக்கர வாகனம் என் மகனுடையது என அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) திருடிய போது நான் வீட்டில் கீழ் பகுதியில் படுக்கை அறையில் படுத்திருந்தேன். அன்றையதினம் நான் திருடிய போது வெளியே வந்து பார்த்தேனா என்றால் இல்லை. காலையில் தான் பார்த்தேன். யார் திருடினார்கள்

என்று நான் பார்க்கவில்லை. நான் அரசு தயார் செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**